புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் அந்தக் கிராமத்திற்கு ஒரு கிராமச் சுகாதார நிலையம் அல்லது மருந்தகமாவது ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலியமலை கிராமத்திலே ஒரு துணை சுகாதார நிலையத்தில் இந்த சின்ன கிராமம் இணைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அந்த துணைச் சுகாதார நிலையத்திற்கு உள்ளடங்கிய மக்கள் தொகை 4,008. எனவே ஒரு துணை சுகாதார நிலையத்திற்கு குறைந்தபட்சம் 5 ஆயிரம் மக்கள் தொகை இருந்தால்தான் புதிதாக ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்க முடியும். எனவே, ஏற்கெனவே இருப்பதேகூட 5 ஆயிரத்திற்கு இல்லாமல் 4 ஆயிரம் மட்டுமே இருக்கிற காரணத்தினால் புதிதாக அமைப்பது என்பது நிதி நிலைமைக்கு இடம் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 503, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

503—

பேரணாம்பட்டு தொகுதி, மாதனூரில் சமுதாய நலவாழ்வு மையம் அமைத்தல்.

*19990—டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, மாதனூரில் சமுதாய நலவாழ்வு மையம் (Community Health Centre) தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், துவங்கப்படும் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பேரணாம்பட்டு தொகுதி, மாதனூரில் சமூதாய நலவாழ்வு மையம் அமைக்கும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1994 மே 4]

முற்பகல் 10-10

டாக்டர் ஜெ பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதனூர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ள பகுதி நிறைய மக்கள் தொகை, 30 ஆயிரத்திற்கு மேல் கிட்டத்தட்ட 50 ஆயிரம் மக்கள் வாழ்கின்ற ஒரு பகுதியாகும், இந்த ஆரம்ப சுகாதார நிலையம் நெடுஞ்சாலையில் இருக்கிறது. விபத்துக்கள் அடிக்கடி ஏற்பட வாய்ப்புள்ள இடம். ஒன்றியத்தினுடைய தலை நகராகவும் இருக்கிறது. நிறைய கிராமங்கள், அதிலும் நிறைய ஏழை பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். பஸ் பயணம் செய்து சிகிச்சைப் பெறும் அளவிற்கு வசதி வாய்ப்புகள் குறைவான பகுதியிலே, அணைக்கட்டு தொகுதியும், ஆலங்காயம் பகுதியும், மலைப் பகுதியில் இருக்கிறது. எனவே, முன் உரிமை தந்தாவது, கருணை அடிப்படையிலாவது இதை மறுபரிசீலனை செய்ய அமைச்சர் முன்வருவாரா ?

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒன்றியத்திலே ஏறத் தாழ 90 ஆயிரம், மக்கள் தொகையாகும். இங்கே 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நியாயமாக இருக்க வேண்டும். ஆனால், இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இப்பொழுது இருக்கின்றன. மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டிய நார்ம்ஸ் படி தேவை இருக்கிறது, என்றாலும், இந்த ஆண்டிலே எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு இல்லை. எதிர்காலத்திலே அதைப்பற்றி புதிதாக, ஆரம்பிப்பது பற்றி யோசிக்கலாம். ஆனால், அதையே நல்வாழ்வு மையமாக/ அப்கிரேடட் பி.எச்.சி. ஆக மாற்று வதற்கான செயற்குறிப்பு இருக்கிறதா என்று கேட்டிருக் கிறார்கள். அதற்கு தான் வாய்ப்பு இல்லையென்று சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகப் பிரதான இடம் என்று சொல்கிற காரணத்தால் அதைப்பற்றி உத்தரவாதமாக எடுத்துக் கொள்ளக் கூடாது, ஆனால் ஆய்வு செய்து தேவை இருக்குமானால், நிதி நிலைமை இடம் கொடுக்குமானால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆரம்பச் சுகாதார நிலையப் பகுதியிலே நிறைய இடம் இருக்கிறது. தேவைப் பட்டால் நிலம்கூட பக்கத்திலே இருக்கிற கோயில் பகுதியிலே இருக்கிறது. தற்போது புரட்சித் தலைவியின் மருத்துவ நலத் திட்டம் மிகச் சிறப்பாக அங்கே நடைபெற்று முடிந்திருக்கிறது. கண் சிகிச்சை முகாமும் நடந்து, அந்த கண் சிகிச்சைக்காக பெரும்பாலும் அந்த மருத்துவமனை

யிலே அறுவை சிகிச்சை செய்வது சிரமமாக இருந்தாலும் கூட மாதனூர் ஆரம்பச் சுகாதார நிலையத்திலே கண் சிகிச்சைக்குக் கூட, அறுவை சிகிச்சை செய்திருக்கிறார்கள். எனவே, சுற்றுப்புற பகுதிகளையும்கூட கணக்கிலே கொண்டு இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை தந்து இதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலம் பிரச்சினையே இல்லை. நிதி தான் பிரச்சினை. இப்பொழுது நிதிநிலைமையில் இந்த ஆண்டு நாம் இதை சேர்த்துக்கொள்வதற்கான வாய்ப்பு இல்லை என்ற காரணத்தினால் தான் அதைத் தெரிவித்தேன். எனவே, எதிர்காலத்திலும் கூட உத்தரவாதமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பார்க்கிறபோது அதிலே தனி முக்கியத்துவம் இருக்குமோ என்று தோன்றுகிற காரணத்தால் தனியாக ஒரு ஆய்வு மேற்கொள்ளலாம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், உடனடியாக, இந்த ஆண்டிலேயே எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 504, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

504—

பல்லவன் போக்குவரத்துக் கழக மாதாந்திர பயணச்சீட்டுக்களை யு. கோ. வங்கி மூலம் பயணிகளுக்கு விற்பனை செய்தல்.

*16383—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவர்கள் உள்ளிட்ட பஸ் பயணிகளுக்கு மாதாந்திர காலவரை பயணச்சீட்டுகள் விற்பனை செய்ய யுனைடெட் கமர்சியல் வங்கியுடன் பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,